**தலைப்பு 198 - நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 198 – நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 ஆகஸ்ட் 09 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த ஏற்பாடும் செலவும்**

நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 7,215.06 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் வரையில் இதில் ரூபா 9,139.93 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தேறிய ஏற்பாட்டிலிருந்து ரூபா 1,924.87 மில்லியன் அல்லது 26.68 சதவீதம் மிகையாக செலவாகியிருந்தது. விபரம் பின்வருமாறு.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 333.29 | 315.45 | 17.84 | 5.35 |
| மூலதனம் | 6,881.77 | 8,824.48 | (1,942.71) | (28.23) |
| **மொத்தம்** | **7,215.06** | **9,139.93** | **(1,924.87)** | **(26.68)** |

**2.2 முற்பணக் கணக்கு**

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ள எல்லைகள்**

நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சிற்குரிய 198011 ஆம் விடய இலக்கத்தின் கீழான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான தொகைகள் பின்வருமாறாகும்.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானது** |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 20.00 | 0.01 | 0.03 | 0.59 | 24.00 | 22.51 |

**2.3 கட்டுநிதிக் கணக்கு**

நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சின் கீழான 7002/0000/00/0446/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி ரூபா 4.15 மில்லியன் ஆகும்.

**2.4 பொது வைப்புக் கணக்கு**

நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சின் கீழான 6000/0000/00/0012/0075/000 ஆம் இலக்க பொது வைப்புக்கணக்கில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 9.33 மில்லியன் ஆகும்.

**2.5 கணக்காய்வு அவதானிப்புகள்**

நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பன மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளன.

**3. போதியளவும் பொருண்மையானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**3.1 மிகை செலவினம்**

198-2-3-2502 செலவின விடயத்தின் கீழ் ரூபா 40 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த செலவின விடயத்தின் கீழ் ரூபா 3,012.48 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த செலவின விடயத்தின் கீழ் ரூபா 2,972.48 மில்லியன் மிகை செலவினமொன்று ஏற்பட்டிருந்தது. அந்த செலவின விடயத்தின் கீழான ரூபா 2,972.48 மில்லியன் மிகை செலவினத்தின் காரணமாக அந்த செயற்திட்டத்திலான மிகை செலவினம் ரூபா 1,954.78 மில்லியன், குறித்த நிகழ்ச்சித்திட்டத்தின் மிகை செலவினம் ரூபா 1,944.38 மில்லியன் மற்றும் தலைப்பிலான மிகை செலவினம் ரூபா 1,924.88 மில்லியன் ஏற்படுவதற்கு தாக்கமளித்திருந்தது.

**3.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

விடய இலக்கம் 19801 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகவிருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,769,920 ஆக இருந்ததுடன், அந் நிலுவை மீதிகள் 1 முதல் 20 வருடங்கள் வரையான காலமாக முன்கொண்டுவரப்பட்டவாறு இருந்த போதிலும், அந்த மீதியினை அறவீடு செய்வதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

**3.3 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**உள்ளகக் கணக்காய்வு**

அமைச்சின் கீழ் 04 நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும், அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தலைமை உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் பொறியியல் உதவியாளர்கள் இருவரை மாத்திரம் கொண்டிருந்தது. எனினும், அமைச்சின் பணியுடன் ஒப்பிடும் போது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பணியினை நிறைவேற்றுவதற்காக இணைப்புச் செய்யப்பட்டிருந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை

என்பது அவதானிக்கப்பட்டது. 2015 ஆம் ஆண்டின் போது அமைச்சிற்குரிய உள்ளகக் கணக்காய்வு ஐயவினாக்கள் எவையும் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

அமைச்சினால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத ரூபா 38,956,243 தொகையான பொறுப்புக்கள் நிலவின. அந்த பொறுப்புக்கள் தொடர்பான காலப் பகுப்பாய்வொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே விபரித்துக் காண்பிக்கப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை** | | |
| | நிதிப்பிரமாணம் 264 | 4,011,054,982 | பணம் செலுத்தப்பட்டதாக ஒப்பந்தக் கம்பனியால் முத்திரையிடப்பட்ட பற்றுசீட்டொன்றின் மூலம் சான்றுறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | **முகாமைத்துவ சேவைகள் சுற்றிக்கை** | | |
| | 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க மற்றும் 2007 திசெம்பர் 20 ஆந் திகதிய 33 (1) ஆம் இலக்க சுற்றிக்கை | - | குறித்துரைக்கப்பட்ட தகைமையினைப் பெற்றிராத மூன்று சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதகமான தாக்கங்களை குறைக்கும் செயற்திட்டத்தின் பதவியணிக்கு இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தனர். |

## 3.6 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் வெளிநாட்டு நிதியளிப்பின் கீழ் செயற்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருந்தது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம் அதன் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 14,617 மில்லியனாக இருந்ததுடன், அந்த செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் ரூபா 1,842 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக 2013 ஆம் ஆண்டின் போது முடிவுறுத்தப்பட வேண்டிய செயற்திட்டமொன்றும் அமைச்சின் வசமிருந்தது. இந்த வெளிநாட்டு உதவி செயற்திட்டம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) காலநிலை மாற்றத்தின் பாதகமான தாக்கங்களை குறைக்கும் செயற்திட்டத்தின் செயலாற்றல்

வெளிநாட்டு உதவி செயற்திட்டங்களின் நிதிச் செயலாற்றல் மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு

(i) வெள்ளம் மற்றும் மண் சரிவினால் ஏற்படக்கூடிய போக்குவரத்து அசௌகரியங்களை குறைப்பதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் எச்சரிக்கைக்குள்ளாகியுள்ள பிரதேசங்களில் அணைக்கட்டுக்களை அமைக்கும் 07 நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வெள்ள நிலைமைக்கு காரணமாக அமையும் பாலங்கள் மற்றும் 12 கால்வாய்களை அபிவிருத்தி செய்வதற்காக 09 நிகழ்ச்சித்திட்டங்களை இனங்கண்டு கையளிக்கப்பட்ட ஒப்பந்தங்களிடையே நெதிமாலே – பொரலஸ்கமுவ பாலத்தின் மீளமைப்பு பணிகளின் செயன்முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(ii) நடைமுறைப்படுத்தும் பிரதிநிதித்துவ நிறுவனங்களிடமிருந்து தெரிவு செய்யப்பட்ட 05 பேரைக் கொண்ட உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று இடம்பெற்றிருக்கவில்லை.

(iii) தென் மாகாண நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்தின் களப் பரிசோதனைகளின் பிரகாரம் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- திஸ்ஸ வாவி மற்றும் யோத வாவி செயற்திட்டத்திற்குரிய விநியோகக் கால்வாயொன்றின் பக்கச் சுவர் நீர்க்கசிவுடன் காணப்பட்டதுடன், அந்த விநியோகக் கால்வாய்க்கு மேலாக நிர்மாணிக்கப்பட்டிருந்த களனிக் காய்வாயிலும் நீர்க்கசிவொன்று காணப்பட்டது. மேலும் செயற்திட்டத்தின் கீழ் 20 நிர்மாணங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் 16 நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

- செயற்திட்டத்தின் கீழ் வீரக்கெட்டிய பிரதேச பொறியியலாளர் அலுவலகத்திற்குரிய 25 நிர்மாணங்களில் 16 நிர்மாணங்கள் மீளாய்வாண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) ஏழைகளிற்காதரவான பொருளாதார முன்னேற்றம் மற்றும் சமூக விரிவாக்கல் (PEACE) செயற்திட்டம்

இந்த செயற்திட்டம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(i) வெளிநாட்டு செயற்திட்டங்களை கலைத்தல்**

வெளிநாட்டு செயற்திட்டங்களை முடிவுறுத்தி கலைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும், 2013 ஒக்தோபர் 22 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்ட மேற்குறித்த செயற்திட்டம் தொடர்பில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- செயற்திட்டத்தை கலைப்பதற்கான திட்டம் 2015 மே 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும் 2013 யூலை 01 ஆந் திகதி முதல் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியினுள் செயற்திட்டத்தால் ரூபா 25,420,885 செலவிடப்பட்டிருந்தது.

- செயற்திட்டத்தை முடிவுறுத்தும் போது ரூபா 484,877,148 கிரயத்திற்கு கொள்வனவு செய்யப்பட மோட்டார் வாகனம், இயந்திர உபகரணங்கள், இரசாயன ஆய்வுகூட மற்றும் அளவீட்டு இயந்திரங்கள் போன்ற சொத்துக்கள் பல்வேறு அரச முகவர் நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தன. எவ்வாறெனினும் அந்த சொத்துக்கள் உரிய அரச நிறுவனங்களால் பொறுப்பேற்கப்பட்டதாக உறுதிப்படுத்தும் சொத்துக்களை கையேற்கும் பட்டியல், வாகனங்களை பதிவு செய்யும் புத்தகம் போன்ற எழுத்து மூலமான சான்றுகள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

- கணக்காய்விற்கு பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த தகவல்களின் பிரகாரம், 23 மோட்டார் வாகனங்கள் அரச முகவர் நிறுவனங்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. எவ்வாறெனினும், நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலில் அந்த வாகனங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

- நீர்ப்பாசன திணைக்களத்தின் ரம்பேவ வேலைத்தளத்திற்கு 46 மோட்டார் சைக்கிள்கள் கையளிக்கப்பட்டிருந்ததெனினும், அந்த மோட்டார் சைக்கிள்களை கையளிப்பதற்குரிய காரணங்கள் தெளிவுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

- செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட பகிர்ந்தளித்தல் பட்டியல்களில் பெறுமதிகள் குறிப்பிடப்படாததால் அரச பிரதிநிதித்துவ நிறுவனங்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்ட நிலையான சொத்துக்களை நிதிக்கூற்றுக்களுடன் ஒப்பிட முடியாது போயிருந்தது.

- செயற்திட்டத்தின் பணிகளின் கீழ் எடுக்கப்படாத மஹாவலி அதிகாரசபையின் நீராவிய விவசாயப் பண்ணைகான பூசோ கெப் வண்டியொன்று, குளிரூட்டியொன்று மற்றும் செசி ஒன்றினைக் கொண்ட பால் உற்பத்தி அலகொன்றிற்காக முறையே ரூபா 7.30 மில்லியன் மற்றும் ரூபா 15.67 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

### 3.7 பிரதான பணிகளுக்கு முரணான செயற்பாடுகள்

முப்படை மற்றும் இலங்கை பொலிஸ் ஆகியவற்றுக்கு பகிர்ந்தளிப்பதற்காக அரச பாதுகாப்பு அமைச்சிற்காக முன்னர் பொருத்தப்பட்ட கட்டிடங்கள் கொள்வனவு செய்யப்பட்டு 07 தவணைகளில் செலுத்துவதற்காக 2012 யூலை 05 ஆந் திகதி சீனக் கம்பனியொன்றுடன் உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 2,774.80 மில்லியன் செலுத்தப்பட்டிருந்ததுடன், 2012 ஆம் ஆண்டு முதல் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 11,351.39 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இந்த

முன்பொருத்தப்பட்ட கட்டிடங்களின் கொள்வனவு அமைச்சின் விடய எல்லைக்கு உரித்துடைய பணியொன்றல்லாததுடன், அமைச்சின் செயல்நடவடிக்கைத் திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் முப்படை மற்றும் பொலிஸ் ஆகியவற்றுக்கு கையளிக்கப்பட்ட இல்லங்களின் மொத்த எண்ணிக்கை மற்றும் அந்த இல்லங்கள் திருப்திகரமாக பொருத்தப்பட்டதாக நிறுவனத்தின் தலைவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்களும் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சின் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மை கொண்டனவாகும். தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட அவ்வாறான சில கொடுக்கல் வாங்கல்களின் விபரம் பின்வருமாறு

### (அ) கிங் நில்வலா திசைதிருப்பும் செயற்திட்டம்

நீர்ப்பாசன மற்றும் நீரக வளமூல முகாமைத்துவ அமைச்சினால் கிங் நில்வலா திசைதிருப்பும் செயற்திட்டத்திற்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 998.58 மில்லியனும், 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 3,012.48 மில்லியனுமாக ரூபா 4,011.06 மில்லியன் கூட்டுத்தொகைப் பணம் தொழில் ஆரம்பிப்பு முற்பணமாக (Mobilization Advance) வெளிநாட்டுக் கம்பனியொன்றுக்கு செலுத்தப்பட்டிருந்தது. அந்த பணத்தில் ரூபா 1,038.58 மில்லியனை செலுத்துவதற்காக திறைசேரியினால் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், ரூபா 2,972.48 மில்லியனை செலுத்துவதற்காக நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2015 செப்தம்பர் 04 ஆந் திகதிய BD/EE/144/09/21 ஆம் இலக்க தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் கிங் நில்வலாவினை திசைதிருப்பும் செயற்திட்டத்திற்காக 2015 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த ரூபா 3,012.48 மில்லியன் முற்பணத்தொகையினை தீர்ப்பதற்காக மேலதிக நிதியேற்பாடு வழங்க முடியாதெனவும், நிதியேற்பாடு எல்லையினை விஞ்சி செலவினங்கள் மேற்கொள்ளப்படக் கூடாதெனவும், 2015 ஆம் ஆண்டின் போது ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு ரூபா 40.00 மில்லியனாக இருந்த போதிலும், அந்த எல்லையினை மிகைத்து ரூபா 2,972.48 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.

(ii) பிரதமரின் செயலாளர் மற்றும் அமைச்சின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு முகவரியிடப்பட்ட 2016 பெப்ரவரி 13 ஆந் திகதிய மற்றும் 2016 மார்ச் 14 ஆந் திகதிய MI/IRRIDEV/02/20/GNDP ஆம் இலக்க அமைச்சு செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் பணிகளை ஆரம்பிப்பதற்காக ஒப்பந்தப் பெறுமதியில் 5 சதவீதத்தை முற்பணமாக செலுத்துவதற்கு அமைச்சு இணங்கியிருந்ததாக அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒப்பந்தப் பெறுமதியான 690.00 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலரில் 5 சதவீதமான 34.50 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் பணிகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஒப்பந்ததார கம்பனிக்கு செலுத்த வேண்டியிருந்தது. அவ்வாறு கொடுப்பனவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்காமல் 2014 திசெம்பர் 30 ஆந் திகதி 7.51 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களும் (ரூபா 998.58 மில்லியன்), 2015 சனவரி 06 ஆந் திகதி 7.49 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களும் (ரூபா 1,000.14 மில்லியன்), 2015 சனவரி 07 ஆந் திகதி 14.99 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் (ரூபா

2,009.34 மில்லியன்), எனுமாறு மொத்தமாக 29.99 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் (ரூபா 4,011.05 மில்லியன்) தொழில் ஆரம்பிப்பு முற்பணமாக செலுத்தப்பட்டிருந்தது. அந்த கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கான காரணம் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) தொழில் ஆரம்பிப்பு முற்பணமான 34.50 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர் முற்பணத்தை செலுத்தி முடிக்கும் வரையிலும் ஒப்பந்தக் கம்பனிக்கு பணியினை ஆரம்பிப்பதற்கான இயலுமை காணப்படவில்லை. 2015 சனவரி 08 ஆந் திகதியளவில் செலுத்த வேண்டியதாக இருந்த தொழில் ஆரம்பிப்பு முற்பணத் தொகையில் 4.51 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களால் குறைத்து தொழில் ஆரம்பிப்பு முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்தன. அமைச்சினால் முற்பணத் தொகை செலுத்தப்பட்ட காரணத்தால் 1 ½ வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக முழுமையாக எதுவித விளைவொன்றும் இல்லாது வெளிநாட்டு கம்பனியொன்றுக்கு இந்த முற்பணத்தை பயன்படுத்துவதற்கு அரசினால் இடமளிக்கப்பட்டிருந்தது.

(iv) நிலவிய நிலையான வைப்பு வட்டி விகிதம் 10 சதவீதமாக கருதினால் ஒப்பந்ததார கம்பனிக்கு செலுத்தப்பட்டுள்ள தொழில் ஆரம்பிப்பு முற்பணம் நிலையான வைப்புக் கணக்கொன்றில் 1 ½ வருடங்கள் முதலீடு செய்யப்படுமாயின் ரூபா 601.66 மில்லியன் வட்டி வருமானமொன்றினை ஈட்டுவதற்கான இயலுமை காணப்பட்டது. அதனால் திரட்டு நிதியத்திற்கு ரூபா 601.66 மில்லியன் நிதி ரீதியான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. செலுத்தப்பட்டிருந்த பணம் மற்றும் மொத்தக் காலத்தினுள் பணத்தின் பெறுமதி குறைவடையும் அளவினையும் கணக்கிட்டு அதற்குரிய வட்டியுடன் மொத்த பணத்தை மீள அறவிடுவதற்கும் திரட்டு நிதியத்திற்கு ஏற்படுத்தப்பட்ட நட்டம் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்குமான உரிய நடைமுறைகள் 2016 ஆகஸ்ட் 09 ஆந் திகதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) 2014 மற்றும் 2015 ஆகிய வருடங்களில் மூன்று சந்தர்ப்பங்களில் ஒப்பந்ததார கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 4,011.05 மில்லியன் முற்பணமானது அந்த கம்பனியால் பெற்றுக்கொள்ளப்பட்டதை உறுதிப்படுத்தி உரிய முத்திரைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(vi) 2015 திசெம்பர் 02 ஆந் திகதிய MI/IRRI.Dev/02/2015/GNDP ஆம் இலக்க அமைச்சு செயலாளர் மற்றும் ஒப்பந்தக் கம்பனிக்கு முகவரியிடப்பட்ட கடிதங்களின் பிரகாரம், செலுத்தப்பட்டுள்ள தொழில் ஆரம்பிப்பு முற்பணத் தொகையினை மீளப் பெற்றுத்தருமாறு கோரப்பட்டிருந்த போதிலும், 2016 ஆகஸ்ட் 09 ஆந் திகதி வரையிலும் அந்த தொகை அமைச்சினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(viii) 2015 ஒக்தோபர் 26 ஆந் திகதிய DMA/IA/2015/41 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் மற்றும் மஹாவலி மற்றும் 2015 திசெம்பர் 11 ஆந் திகதிய இலக்கமிடப்படாத சுற்றாடல் அமைச்சின் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம், பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள வங்கி பிணைப்பொறுப்பின் செல்லுபடியான காலம் முடிவடைவதற்கு முன்னர், அதாவது 2017 திசெம்பர் 09 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தப்பட்டுள்ள தொழில் ஆரம்பிப்பு முற்பணத் தொகை மற்றும்

அதற்குரிய நட்டத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

## 3.9 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (i) சிரேஷ்ட நிலை | 04 | 02 | 02 |
| (ii) மூன்றாம் நிலை | 13 | 07 | 06 |
| (iii) இரண்டாம் நிலை | 40 | 31 | 09 |
| (iv) ஆரம்ப நிலை | 30 | 19 | 11 |
| **மொத்தம்** | **87** | **59** | **28** |

மீளாய்வாண்டின் இறுதியில் 28 ஊழியர் வெற்றிடங்கள் நிலவிய போது 2015 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு பயன்படுத்தப்படாது சேமிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த சேமிப்பு தொடர்பில் பதவியணியில் வெற்றிடங்கள் நிலவியமை தாக்கமளித்திருக்கவில்லை. அதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியிலான மிகை மதிப்பீடொன்று கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### (ஆ) முறையற்ற விதத்தில் ஏனைய தரப்பினரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மனிதவளங்கள்

அமைச்சினால் மீளாய்வாண்டின் போது ஏனைய தரப்பினரிடமிருந்து முறையற்ற விதத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த மனிதவளங்கள் தொடர்பான விபரம் பின்வருமாறு

| | ஊழியர் வகை | எண்ணிக்கை | ஏனைய தரப்பினர் | பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த காலப்பகுதி |
|---|---|---|---|---|
| (i) | சாரதி | 01 | நீர்ப்பாசனத் திணைக்களம் | 2015 யூன் 29 ஆந் திகதி முதல் இன்று வரை |
| (ii) | தொழிலாளர் | 01 | நீர் வளங்கள் சபை | 2015 செப்தம்பர் 09 ஆந் திகதி முதல் இன்று வரை |
| (iii) | தொழிலாளர் | 01 | நீர் வளங்கள் சபை | 2016 சனவரி 27 முதல் 2016 யூன் 21 வரை |
| (iv) | அலுவலக உதவியாளர் (அமைய) | 01 | நீர் வளங்கள் சபை | 2015 செப்தம்பர் 22 முதல் இன்று வரை |

| | | | | |
|---|---|---|---|---|
| (v) | அலுவலக உதவியாளர் (ஒப்பந்தம்) | 01 | நீர் வளங்கள் சபை | 2015 நவம்பர் 13 முதல் 2015 திசெம்பர் 02 வரை |
| (vi) | அலுவலக உதவியாளர் | 01 | நீர் வளங்கள் சபை | 2016 பெப்ரவரி 11 முதல் 2016 மார்ச் 11 வரை |
| (vii) | முகாமையாளர் (நிர்வாகம்) ஒப்பந்தம் | 01 | நீர் வளங்கள் சபை | 2015 யூன் 18 முதல் இன்று வரை |

அமைச்சின் பணிகளுக்காக அங்கீகாரமின்றி ஈடுபடுத்தப்பட்டிருந்த சாரதியின் சம்பளம் மற்றும் படிகளாக மீளாய்வாண்டின் போது ரூபா 197,340 தொகை நீர்ப்பாசன திணைக்களத்தின் செலவினத் தலைப்பிலிருந்து செலுத்தப்பட்டிருந்ததுடன், தொழிலாளர்கள், அலுவலக உதவியாளர்கள் மற்றும் முகாமையாளரின் சம்பளம் மற்றும் படிகளாக மீளாய்வாண்டினுள் ரூபா 437,444 தொகை நீர் வளங்கள் சபையினால் செலுத்தப்பட்டிருந்தது.